JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| STC.No. | **531/2024** | Crime No. | 112/2024 | Station | Bhavani |

| | | | |
|---|---|---|---|
| Name | **PW.4– சின்ராசு** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 24.03.2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் வரதப்பன்நல்லூர், கூலிக்காரன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் வந்து கொண்டிருந்தபோது அங்கு கூட்டமாக இருந்தது. அருகில் சென்று விசாரித்தபோது வயதான பாட்டி ஒருவர் ரோட்டை கடக்கும்பொழுது பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகுதான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.02.2024 ஆம் தேதியன்று காலை சுமார் 08:30 மணியளவில் நான் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் இருந்ததாகவும், அப்போது பவானி – மேட்டூர் ரோடு, கருமகவுண்டன்புதூர், கூலிக்காரன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில் இந்த விபத்தில் அடிபட்ட தாண்டாயி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை நடந்து சென்றதாகவும், அப்போது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த பைக் தாண்டாயின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது தாண்டாயிக்கு இடது கை, இடது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:13:20 +0530

கெண்டைக்கால், வலது கால் பாதம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அங்கு விசாரித்தபோது அந்த பைக்கை ஓட்டி வந்தவர் பிரகாஷ் என்று தெரிந்து கொண்டதாகவும், அருகில் இருந்தவர்களின் உதவியுடன் ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட தாண்டாயை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:13:25 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness
for Prosecution

| STC.No. | 531/2024 | Crime No. | 112/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.5– சந்தோஷ் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 24.03.2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சன்னியாசிப்பட்டி, ஏப்பம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 23.02.2024 ஆம் தேதியன்று மாலை நானும், மோகன்ராஜ் என்பவரும் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் இருந்தபொழுது அங்கு வந்த போலீசார் அன்றைய தினம் காலையில் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற விபத்து தொடர்பாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால் நானும், மோகன்ராஜ் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகு அன்றைய தினம் மாலையில் தான் நான் விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்தேன். விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.02.2024–ம் தேதியன்று காலை சுமார் 08:30 மணியளவில் நான் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் இருந்ததாகவும், அப்போது பவானி – மேட்டூர் ரோடு கருமகவுண்டன்புதூர், கூலிக்காரன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில் இந்த விபத்தில் அடிபட்ட தாண்டாயி என்பவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை நடந்து

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:13:32 +0530

சென்றதாகவும், அப்போது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த பைக் தாண்டாயின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது தாண்டாயிக்கு இடது கை, இடது கெண்டைக்கால், வலது கால் பாதம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அங்கு விசாரித்தபோது அந்த பைக்கை ஓட்டி வந்தவர் பிரகாஷ் என்று தெரிந்து கொண்டதாகவும், அருகில் இருந்தவர்களின் உதவியுடன் ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்ட தாண்டாயை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:13:38 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani